செ.கு.எண்:90 நாள்:11.11.2021

**இன்று (11.11.2021) மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சென்னை, தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி**

கடந்த சில நாட்களாக தமிழகத்தில் வடகிழக்குப் பருவ மழை ஆரம்பித்துவிட்டது. தமிழகத்தைப் பொறுத்தவரை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இப்பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே, அனைத்துத் துறையினுடைய அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களையும் அழைத்து காணொலிக் காட்சியில் நேரடியாகப் பேசியிருக்கின்றார்கள். வேளாண் துறையின் சார்பில் மூன்று கட்டமாக நாங்கள் கூட்டத்தை நடத்தியிருக்கின்றோம். மாவட்டந்தோறும் உள்ள அதிகாரிகளைத் தொடர்புகொண்டு காணொலிக்காட்சி மூலமாக கூட்டத்தை நடத்தி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தியதற்கிணங்க, அனைத்துப் பகுதிகளிலும் நம்முடைய வேளாண் துறையைச் சார்ந்த அதிகாரிகள் கணக்கெடுக்கும் பணியை துரிதப்படுத்த வேண்டும் எனவும், தினந்தோறும், மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அறிந்து அந்த கணக்கெடுப்பை தலைமைக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டிருக்கிறோம்.

அதன் அடிப்படையில் இன்றையதினம் இதுவரையில் தமிழகத்தில் சம்பா சாகுபடி கிட்டத்தட்ட 44 இலட்சம் ஏக்கர் நிலம் பயிர் செய்யப்பட்டிருக்கிறது. அவற்றில் கிட்டத்தட்ட 1 இலட்சத்து 45 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் அதாவது நடவு நட்ட சம்பா பயிர் மழை வெள்ளத்தில் நனைந்து மூழ்கியிருக்கிறது. இப்போதுதான் சற்று தண்ணீர் வடியத் தொடங்கியிருக்கிறது. பல பகுதிகளில் கடந்த இரண்டு நாட்களாக மழை குறைந்ததினால் அந்தப் பகுதிகளில் எல்லாம் இப்போது தண்ணீர் வடிந்துகொண்டிருக்கிறது. இதனுடைய தாக்கம் 33 சதவீதத்திற்கு மேல்

பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலைமை ஒருசில நாட்களில் கணக்கெடுக்கும்போது தெரியும். ஆகவே, அந்த 33 சதவீதம் அளவிற்கு எந்தப் பயிர், இடம், எந்த ஊர், எந்த கிராமம், எந்தப் பகுதி பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து அதற்குரிய நிவாரணத்தை அறிவிக்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கிறது. அதேபோல, கிட்டத்தட்ட 31 இலட்சத்து 76 ஆயிரம் ஏக்கர் தோட்டக்கலை பயிர் செய்யப்பட்டிருக்கிறது. அவற்றில் 6000 ஏக்கர் அளவிற்கு தண்ணீரால் சூழப்பட்டிருக்கிறது. அதனுடைய நிலைமை இன்னும் சில நாட்களில் தண்ணீர் வடியும்போதுதான் தெரியும்.

இதையெல்லாம் அறிந்து செயல்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் ஒரு அமைச்சர்கள் குழு அறிவித்திருக்கின்றார். அமைச்சர்கள் குழுவில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. இ. பெரியசாமி அவர்களுடைய தலைமையில் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் திரு. எஸ். இரகுபதி, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாண்புமிகு சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் ஆகிய அமைச்சர்கள் கொண்ட குழு இப்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அமைக்கப்பட்டு, இந்தக் குழுவினர் உடனடியாக டெல்டா மாவட்டங்களுக்குச் சென்று பாதிக்கப்பட்ட பகுதிகளைப்

பார்வையிட்டு, நிவாரண நடவடிக்கைகளை துரிதப்படுத்திட ஏதுவாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு அறிக்கை தர அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இக்குழு உடனடியாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்குச் சென்று நேரடியாக கண்காணித்து, பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாதிக்கப்பட்ட விளைநிலங்கள், பாதிக்கப்பட்ட வீடுகள் எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அதிகாரிகளுடன் சென்று பார்வையிட்டு அந்த அறிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கொடுப்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தக் குழுவை அமைத்திருக்கிறார்கள். இதை கூடுதலாக நேரடியாக பார்வையிடுவதற்கு அவர்கள் செல்வார்கள்.

**கேள்வி**: இந்தக் குழுவின் அறிக்கை வந்த பிறகு நீங்கள் ஒன்றிய அரசிடம் நிவாரணம் கேட்பதற்கு வாய்ப்பிருக்கிறதா?

**பதில்:** தமிழகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரே உடனடி நிவாரணம் கொடுப்பதாக அறிவிப்பார். ஒன்றிய அரசிடம் கேட்பது அதற்குப் பிறகுதான். இக்குழு அந்தந்த மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்று கண்காணித்து நடவடிக்கையை துரிதப்படுத்துவதற்கு கணக்கெடுப்பை ஒப்படைப்பார்கள். அதற்குப் பிறகு பேரிடர் நிவாரண நிதியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிவாரணத்தை அறிவிப்பார்கள்.

**கேள்வி**: தக்காளியின் விலை 120 ரூபாய் ஆகிவிட்டது. பண்ணைப் பசுமைக் கடைகளிலிருந்து காய்கறிகள் விற்பனை செய்யப்படுமா?

**பதில்:** இப்போது மழையினுடைய தாக்கத்தினால் விவசாயிகள் வேலைக்குச் செல்ல இயலவில்லை. தாங்கள் உற்பத்தி செய்த விவசாயப் பொருட்கள் மழையினால் பாதிக்கப்பட்டிருக்கும். நீங்கள் தக்காளி விலை அதிகமாகியிருக்கிறது என்று சொல்கிறீர்கள். வடகிழக்கு பருவமழை காவிரி டெல்டா பகுதிகளில் தொடர்ந்து பெய்துகொண்டு இருக்கிறது. காய்கறிகள் விலையை குறைப்பதற்கான நடவடிக்கையை எடுப்போம். இப்போது ஆங்காங்கே வெள்ள நிவாரணப் பணிகளில் அதிகாரிகள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆக, கண்டிப்பாக விலை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**கேள்வி:** கடந்த Lock down சமயத்தில் நடமாடும் காய்கறிக் கடைகள் மூலமாக விற்பனை செய்யப்பட்டது. இப்போது பெரும்பாலான பகுதிகளில் மழை நீர் சூழ்ந்துள்ளதால், மீண்டும் நடமாடும் காய்கறிக் கடைகள் தொடங்குவதற்கான வாய்ப்பிருக்கிறதா?

**பதில்:** கொரோனா காலத்தில் 10 நாட்களில் 48,000 வாகனங்கள் மூலமாக நடமாடும் கடைகள் மூலமாக காய்கறிகள், மளிகைப் பொருட்களை மக்களுக்குக் கொண்டுசென்றோம். இப்போது அதுபோன்று சூழல் இல்லை, இருந்தாலும் அதற்குரிய நடவடிக்கையை நாங்கள் எடுப்போம்.

**கேள்வி:** இப்போது இருக்கக்கூடிய விவசாயிகள் வருத்தப்படக்கூடிய சூழ்நிலையில் அவர்களுக்கு நீங்கள் சொல்லக்கூடியது என்ன?

**பதில்:** விவசாயிகள் யாரும் வருத்தப்படவில்லை, மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறார்கள்.

**கேள்வி**: பயிர் காப்பீட்டுத் திட்டம் சிலர் கட்டாமல் இருப்பார்கள், காப்பீடு சம்பந்தமாக கடந்த ஆண்டுகூட, தஞ்சாவூர் பகுதிகளில் டிசம்பர் 31 ஆம் தேதி வரையில் புதுப்பிக்க நேரம் கொடுக்கப்படுமா? ...

**பதில்:** நவம்பர் 15ஆம் தேதிக்குள் காப்பீடுக்கு உண்டான பிரீமியம் தொகை கட்டவேண்டுமென்று கடந்த மாதங்களில் நாங்கள் அறிவித்தோம். நேற்று வரை கிட்டத்தட்ட 10 இலட்சத்து 43 ஆயிரம் ஏக்கர் பதிவு செய்திருக்கிறார்கள். 8 இலட்சத்து 8 ஆயிரம் விவசாயிகள் காப்பீட்டுத் திட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 1 இலட்சத்து 44 ஆயிரம் விவசாயிகள் கூடுதலாக பயிர் காப்பீடுக்கு பிரீமியம் தொகை கட்டியிருக்கிறார்கள். இன்னும் ஐந்து நாட்கள் இருக்கிறது. இந்த மழை பாதிப்பு இருப்பதால், இது சம்பந்தமாக அரசுத்துறை அலுவலர்கள் எல்லாம் நிவாரணப் பணிகளில், கணக்கெடுக்கின்ற பணிகளிலும் ஈடுபட்டிருக்கின்ற காரணத்தால், சில தொடர்பணிகள் சற்று காலதாமதமாகிறது. அதனால், இதை கடந்த வாரமே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க ஒன்றிய அரசுக்கு நாங்கள் கருத்தைத் தெரிவித்து, இந்த மாதம் கடைசி தேதி வரை நீட்டிப்பு தாருங்கள் என்று கேட்டிருக்கின்றோம். இது ஒன்றிய அரசும், காப்பீடு நிறுவனமும் இணைந்து முடிவெடுக்க வேண்டிய பணி. அதற்குக்கூட நாம் இடம்கொடுக்காமல், விவசாயிகள் தங்களுடைய பெயரை சேர்க்கின்ற பணியில் தொய்வு வரக்கூடாது என்பதற்காக சனிக்கிழமை கூட கூடுதலாக அப்பணியை ஆற்ற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

**கேள்வி**: பல்வேறு நேரங்களில் விவசாய சங்கங்கள் அரசு நல்லது செய்தாலும், சில நேரங்களில் உணர்வு ரீதியாக சில விஷயங்கள், இப்போதுகூட 15 இலட்சம் ஏக்கர்கள் பாதிக்கப்பட்டது என்றுகூட மேலோட்டமாக சொல்லியிருக்கிறார்களே?

**பதில்** : நானும் விவசாயம் செய்திருக்கிறேன். விவசாயிகளினுடைய உணர்வுகள் எனக்கும் தெரியும். நானும் கிராமத்துக்காரன்தான். என்னுடைய அப்பா காலத்திலிருந்தே எனக்கு விவசாயம் தெரியும். விவசாயம் நாட்டு நடவும் தெரியும். மழை வந்தால் தண்ணீர் தேங்கும். பயிர் அழுகும். தண்ணீர் வடிந்த பிறகு இதனால் என்ன நோய் தாக்கும், அதனால் என்ன நோய் வரும், ஒரு மாதம் மூட்டை இருந்தால் என்னவாகும் போன்ற கருத்துக்களை எல்லாம் அதிகாரிகளிடத்தில் தெரிவித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வலியுறுத்தியிருக்கிறேன்.

**கேள்வி** : கஜா புயல் வந்திருந்தபோது தென்னை மரம் விழுந்ததற்கு நிவாரணம் கொடுத்தார்கள். அதுமாதிரி தென்னை மரத்திற்கு நிவாரணம் கொடுக்கப்படுமா?

**பதில்** : இவற்றையெல்லாம் விரைந்து நேரடியாக சென்று பார்வையிட்டு தங்களுடைய அறிக்கையை அளிப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அமைச்சர்கள் குழுவை அறிவித்திருக்கிறார்கள். இதை நேரடியாக பார்த்துவிட்டு அறிக்கை தாக்கல் செய்வார்கள். விவசாயிகளுடைய உணர்வுகளை அறிந்துதான் விவசாயத்திற்கு தனி பட்ஜெட் அறிவித்தார். எந்த அரசாங்கமும் செய்யாததை நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செய்திருக்கிறார். விவசாயிகளுக்கு இந்த ஆட்சி மீது நம்பிக்கை வந்துவிட்டது. 70 சதவீத மக்கள் விவசாயத்தை நம்பி இருக்கிறார்கள். கொரோனா காலத்தில்தான் விவசாயம் பொய்க்காமல் களத்தில் இருந்தது. அது முடங்கியிருந்தால் நாமும் இல்லை. இந்த வருடம் குறுவை அதிகம் உற்பத்தி

செய்யப்பட்டிருக்கிறது. அதிகமாக சம்பா நடவு செய்யப்பட்டிருக்கிறது, நெல் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. தனி பட்ஜெட் அறிவிக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். ஒரு சில குறைகள் இருந்தால் சுட்டிக்காட்டலாம். குறைகள் உடனடியாக நிவர்த்தி செய்யப்படும்.

**கேள்வி** : இது டெல்டா மாவட்டத்திற்கு மட்டும்தானா? அல்லது தமிழ்நாட்டில் திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கும் உண்டா? கடலூர் மாவட்டம் எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறது?

**பதில்** : டெல்டா மாவட்டங்களில் மழை வெள்ளத்தினால் பயிர்சேத விவரங்களை அமைச்சர்கள் குழு நேரடியாக ஆய்வு செய்கிறார்கள். மற்ற இடங்களில் அதிகாரிகள் நேரடியாக பார்வையிட்டு கணக்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**கேள்வி** : கடலூர் பேரிடர் பகுதியாக கூறிக்கொண்டிருக்கிறோம், அங்கு எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறது. மழை அளவு அதிகமாக இருக்கிறதா?

**பதில்** : கடலூர் மாவட்டத்தில் கிட்டத்தட்ட ஏழாயிரம் ஏக்கர் நீரில் மூழ்கியிருக்கிறது. இப்பொழுது கடலூரில் இரண்டு நாட்களாக மழை இல்லை. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்றவுடனேயே கிட்டத்தட்ட 68 கோடி ரூபாய் அளவிற்கு தூர் வாருகின்ற பணிகளை முடுக்கி விடப்பட்டு, தரமாக தூர்வாரியதனால் இப்போது தண்ணீர் வடிந்துகொண்டிருக்கிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

\- - - -